තාක්ෂණ අමාත්‍යාංශය

தொழில்நுட்ப அமைச்சு

Ministry of Technology

# வருடாந்த செயற்திறன் அறிக்கை

# 2022

mot.gov.lk

## தொழில்நுட்ப அமைச்சரின் செய்தி



2022 ஆம் ஆண்டிற்கான தொழில்நுட்ப அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தொழிலநுட்ப அடிபபடையிலான சமூகத்தை உருவாக்குவதென்பது தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்தின் முக்கிய கொள்கை ஒன்றாகும். இத் தேசிய கொள்கையை அடைவதற்கு வலுவான நிறுவன கட்டமைப்பின் மூலம் தேசிய டிஜிட்டல் பரிமாற்றத்திற்கான பாதையை அமைப்பதில் தொழில்நுட்ப அமைச்சானது அதன் விடயப் பரப்பின் கீழ் செயற்படும் பிரதான செயற்பாட்டு முகவர் நிறுவனத்திற்கு சகல துறையிலும் வழிகாட்டுதல்களையும் ஒத்திசைவான அணுகுமுறைகளையும் இடைவிடாது வழங்கி வருகின்றது.

தேசிய டிஜிட்டல் அரசாங்கம் மற்றும் டிஜிட்டல் பொரளாதார மூலோபாயங்களை செயற்படுத்தும்போது பிரதான அரச சேவைகளை விரைவாக தானியங்கச் செய்தல், சான்றுப்படுத்தல் மற்றும் பல்வேறு துறைகள் ஊடாக டிஜிட்டல் பரிமாற்றங்களுக்கான ஆரம்பத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கும் தொழில்நுட்ப அமைச்சானது அரசாங்க நிறுவனங்களை இடைவிடாது தொடர்புபடுத்திக் கொண்டுள்ளது. இதன் மூலம், இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளம் (SLUDI) போன்ற பிரதான முயற்சிகள், டிஜிட்டல் அடையாள அட்டைகளுக்கான முயற்சிகள் என்பன மூலம் பொதுமக்களுக்கு டிஜிட்டல் மயமான சேவைகளுடனான எதிர்காலத்தினை வழங்க தயாராக உள்ளது

தொழில்நுட்ப அமைச்சானது தொலைத்தொடர்பு ஒழுங்காக்கல் ஆணைக்குழுவின் மூலம் ஆரம்பித்த “ கமட்ட சன்னிவேதனய - இலங்கையைத் தொடர்புபடுத்தல்” திட்டத்தின் மூலம் நாடுதழுவிய புரோட்பேன்ட் இணைப்புகளை விரைவுபடுத்துவதற்கு தற்போதுள்ள கைத்தொழிலை ஊக்குவிப்புச் செய்ததுடன் கிராமிய தொடர்புகளுக்கான வழிசமைத்தல் மூலமாக ITU Connect 2030 இன் நிகழ்ச்சிநிரலுக்கு சமகாலத்தில் குறிப்பிடக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கைத்தொழில் தானியக்கத்திற்கான IOT தொழில்நுட்பத்தினை உபயோகிப்பதற்கு முடியுமான வகையில் எதிர்கால 5G வர்த்தகமயமாக்கல் தொடர்பில் கவனத்தை செலுத்தி சகல கைப்பேசி பாவனையாளர்கள் ஊடாகவும் 5G இனை பரிசோதித்துப் பார்ப்பதனை ஆரம்பிப்பதற்கு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

விரைவான டிஜிட்டல் பரிமாற்றத்திற்கு உட்படும்போது வலுவானதும் பாதுகாப்பானதுமான ஆளுகை மற்றும் டிஜிட்டல் சுற்றுச்சூழல் அத்தியாவசியமாகும். இத் துறையில் குறிப்பிடக்கூடிய வளர்ச்சியைப் பெற்றிருப்பதுடன் பிரசைகளின் தரவுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டவரைபானது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் அமைச்சு கவனம் செலுத்தும் மற்றுமொரு முக்கிய முன்னரிமை என்பது நாட்டின் சைபர் பாதுகாப்பு தயார் நிலையாகும். இது தொடர்பில் சைபர் பாதுகாப்பு சட்ட கட்டமைப்பினை தயாரிப்பதற்கான அங்கீகாரத்தினை அமைச்சானது அமைச்சரவையிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளது. இது தொடர்பான சட்டம் மூலமானது நிறைவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டை டிஜிட்டல் பொருளாதாரத்தினைக் கொண்டதாக ஆக்கும் பொருட்டு அதற்கான ஒழுங்குக் கட்டமைப்பு மற்றும் பிரதான திட்டம் ஒன்றினை அறிமுகம் செய்வதற்கு 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு உள்ள டிஜிட்டல் பொருளாதாரம் 2030 இன் பிரதான திட்டமான DIGICON 2030 மூலம் முடியும்.

2022 ஆம் ஆண்டின் நோக்கங்களை அடைவதற்காக தேசிய டிஜிட்டல் பரிமாற்ற மூலோபாயத்தை செயற்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்கிய தொழில்நுட்ப அமைச்சு மற்றும் அதன் விடயப்பரப்பிற்குட்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கிறேன்.

ரணில் விக்ரமசிங்க
தொழில்நுட்ப அமைச்சர்

## தொழில்நுட்ப அமைச்சின் செயலாளரின் செய்தி



தேசிய அபிவிருத்திக்கான கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு சுபீட்சமான சமூகம் ஒன்றினை நோக்கி செயற்திறனான பிரசை, திருப்திகரமான குடும்பம், ஒழுக்கமானதும் நியாயமானதுமான சமூகம் போன்ற நான்கு விடயங்களின் பெறுபேற்றினை அடைவதற்கு தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட சமூகம் ஒன்றினை உருவாக்குவதே அமைச்சின் பிரதான கொள்கையாகும்.

மேற்குறிப்பிட்ட கொள்கையினை அடைந்துகொள்வதற்கு, டிஜிட்டல் பொருளாதாரத்தன் மூலம் டிஜிட்டல் ரீதியாக அனைவரையும் உள்ளடக்கிய ஸ்மார்ட் ஸ்ரீலங்கா எனும் தேசிய கொள்கையானது நிறுவப்பட்டதுடன், தேசிய முன்னுரிமையின் அடிப்படையில் தேசிய மட்டத்திலான வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டன. தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு , தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம், இலங்கை கணனி அவசர தயார்நிலை அணி (CERT) மற்றும் இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI) என்பன ஒருங்கிணைக்கப்பட்டு பொதுவான நிறுவனம் ஒன்றின் கீழ் கொண்டுவரப்படவேண்டிய முக்கிய முன்னுரிமை நிறுவனங்களாக அடையாளம் காணப்பட்டதுடன், இல 2187/27 இன் 09 ஆகஸ்ட் 2020 ஆம் திகதியினைக் கொண்ட அதி விசேட வர்த்தமானியானது வலுவான நிறுவன கட்டமைப்பின் மூலம், சகல திசைகளையும், உள்ளடக்கிய வலுவான ஒருமைப்பாடு மற்றும் ஒத்திசைவைத் தாபிப்பதற்கான வெளியீடாக தொழில் நுட்ப அமைச்சின் மூலம் வெளியிடப்பட்டது.

அரசாங்க செயற்பாடுகளை மிகுந்த பிரசைகள் நட்பு கொண்டதாக்குவதற்கு அதனை ஒழுங்குபடுத்தி டிஜிட்டல் மயப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள டிஜிட்டல் அடையாள அட்டையானது இத்திட்டத்தினை மெய்ப்பிப்பதற்கான அடிப்படை தீர்வொன்றாக அமையும். 2025 ஆம் ஆண்டில் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டுவதற்கான ஏற்றுமதி வருவாய் இலக்கினை அடைவதற்கு கூட்டாண்மை நிறுவனங்கள் குறிப்பாக IT/BPM துறைகளுக்குக பல ஊக்குவிப்பு சலுகைகள் வழங்கப்பட்டன. அத்துடன், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வலையமைப்பு 2.0, இலங்கை அரசாங்க கிளவுட் 2.0 கனெக்ட் ஸ்ரீலங்கா (கமட்ட சன்னிவேதனய), 1000 பாடசாலைகளுக்கான பைபர் இணைப்பு வழங்கும் திட்டம் என்பன குறிப்பிட்டு சொல்லக்கூடிய திட்டங்களாக உள்ளன.

2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தரவுப் பாதுகாப்பு சட்டமானது இலங்கை பாராளுமன்றததினால் 2022 மார்ச் 19 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை செயற்படுத்த அமைச்சானது தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையினை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். டிஜிட்டல் மயமாக்கலின் மோசமான தாக்கங்களிலிருந்து பொதுமக்களின் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாத்து ஒழுங்குபடுத்த இது உதவும்.

2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இடையறாத ஒத்துழைப்பிற்கு தொழில்நுட்ப அமைச்சின் விடயப்பரப்பிற்கு உட்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் சகல ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

பேராசிரியர். என். டி. குணவர்தன
செயலாளர்
தொழில்நுட்ப அமைச்சு

## பொருளடக்கம்


1. அத்தியாயம் 1 : நிறுவன சுயவிபரம் மற்றும் நிர்வாகச் சுருக்கம் ....................1

1.1 தொழில்நுட்ப அமைச்சு - அறிமுகம்....................1

1.2 நோக்கு ....................1

1.3 செயற்பணி....................1

1.4 நோக்கங்கள் ....................1

1.5 நிறுவன கட்டமைப்பு ....................3

1.6 தொழில்நுட்ப அமைச்சின் கீழான விசேட கருத்திட்டங்கள....................4

1.6.1 இலங்கை தனிப்பட்ட டிஜிட்டல் அடையாளம் (SLUDI) கருத்திட்டம்....................4

1.7 எதிர்காலத் திட்டங்கள்....................5

அத்தியாயம் 02 – முன்னேற்றமும் எதிர்கால நோக்கும் ....................5

அத்தியாயம் 03– 31 டிசம்பர் 2022 இற்கு முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதியியல் செயலாற்றுகை....................7

3.1 நிதியியல் செயலாற்றுகைக்கான அறிக்கை....................7

3.2 நிதியியல் நிலை அறிக்கை....................8

3.3 காசுப் பாய்ச்சுகை அறிக்கை....................9

3.4 நிதியியல் அறிக்கைக்கான குறிப்புகள் ....................11

3.5 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை....................12

3.6 நிதி ஒதுக்கீட்டு பாவனையின் செயலாற்றுகை ....................13

ளள3.7 நி.ஓ.208 இன்படி அமைச்சின் செலவினங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு....................13

3.8 நிதி அல்லாத சொத்துக்களின் செயலாற்றுகை அறிக்கை ....................14

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை....................15

அத்தியாயம் 04 – செயலாற்றுகை குறிகாட்டிகள் ....................22

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறியீடுகள் ( செயல்திட்ட அறிக்கையின் அடிப்படையில்) ....................22

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை ....................23

5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடவும். ....................23

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான சாதனைகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குக சாதனைகள் ....................24

அத்தியாயம் 06 – மனித வள விபரங்கள்....................25

6.1 ஆளணி முகாமைத்துவம் ....................25

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனித வளப் பற்றாக்குறையின் விளைவுகள்....................25

6.3 மனித வள அபிவிருத்தி....................26

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை....................26

அத்தியாயம் 8 : அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களால் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் முன்னேற்றங்களும் எதிர்கால திட்டங்களும்....................34

8.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA)....................34

8.1.1 கருத்திட்டத்தின் முன்னேற்றமும் எதிர்கால திட்டங்களும் ....................34

**8.2 இலங்கை கணனி அவசரநிலை தயார் அணி (SLCERT)** .......... 52
**8.2.1 திட்டங்களினதும் திட்ட வடிவமைப்பாளர்களினதும் எதிர்காலத் திட்டங்கள்** .......... 52
**8.3 இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI)** .......... 56
**8.4 இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்காக்கல் ஆணைக்குழு (TRCSL)** .......... 57
**8.5 ஸ்ரீ லங்கா டெலிகொம் (SLT)** .......... 59
**8.5.1 திட்டங்களின் முன்னேற்றமும் எதிர்காலத் திட்டங்களும்** .......... 59

# 1. அத்தியாயம் 1 : நிறுவன சுயவிபரம் மற்றும் நிர்வாகச் சுருக்கம்

## 1.1 தொழில்நுட்ப அமைச்சு - அறிமுகம்

தொழில்நுட்ப அமைச்சானது இலங்கையின் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(1). 45(1) மற்றும் 47(1) (அ) (ஆ) ஆகிய உறுப்புரிமைகளின் பிரகாரம் வழங்கப்பட்ட அதிகாரத்தினைக் கொண்டு அவரால் அறிவிக்கப்பட்டவாறு தாபிக்கப்பட்டு 2020 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதிய இல 2187 27 இனைக் கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தங்கள் செய்யப்பட்டன. அது 2022 ஜுலை 22 முதல் அமுலுக்க வரும் வகையில் மேலும் திருத்தம் செய்யப்பட்டது..

தொழில்நுட்ப அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள் பின்வருமாறு:

1. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்காக்கல் நிறுவனம் (TRCSL)
2. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையமும் அதன் துணை நிறுவனங்களும் (ICTA)
3. இலங்கை கணனி அவசர தயார்நிலைக் குழு (SLCERT)
4. இலங்கை டெலிகொம் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் (SLT)
5. இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI)

## 1.2 நோக்கு

"நவீன தொழில்நுட்பத்துடன் வலுவூட்டப்பட்ட ஸ்மார்ட் சபீட்சமான தேசம்"

## 1.3 செயற்பணி

சுமூக மற்றும் கைத்தொழில் மறுசீரமைப்பின் ஊடாக தொழில்நுட்ப முன்னேற்றம், புத்தாக்கம் மற்றும் அபிவிரத்தி போன்ற தேசிய நோக்கங்களை அடைவதற்காக தொழில்நுட்ப அடிப்படையிலான கொள்கைகள், மூலோபாயங்கள், முன்னரிமைகள் , திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் வழிகாட்டல்கள் உருவாக்கலும் புத்துயிர் பெறச் செய்தலும.

## 1.4 நோக்கங்கள்

I. அரச பொறிமுறை மற்றும் சந்தை துறைகளின் செயன்முறைகளை எளிதாக்குவதன் மூலம் திறமையானதும் மக்களை மையப்படுத்திய சேவைகள் , அறிவுப் பரிமாற்றம் என்பவற்றை வழங்கும் கருவியாக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் ஆளகையை விரிவுபடுத்தல்.

II. சர்வதேச இலத்திரனியல் வர்த்தக் சர்வதேச இலத்திரனியல் கட்டண முறைகள் என்பவற்றை நிறுவுதல்

III. நாடு தழுவிய அதிவேக தரவுப் பரிமாற்ற அமைப்பு மற்றும் தொடர்புடைய கைத்தொலைபேசி வலையமைப்பு என்பவற்றை நிறுவுதல்,

IV. தரவுப் பாதகாப்பு இணையப் பாதுகாப்பு புலமைச் சொத்துக்கள் சட்டம் என்பவற்றிற்கான புதிய சட்டங்களையும் நிறுவன கட்டமைப்பினையும் அபிவிருத்தி செய்தல்,

V. சுற்றாடல் உணர்திறன், தகவல் தொழில்நுட்பம், அறிவு மற்றும் திறன்கள் சகாதாரம், சுற்றுலா. விளையாட்டு ஆகிய துறைகளில் இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக்காகட்டவதன் மூலம் டிஜிட்டல் ஆளுகை மற்றும் நிறுவன கட்டமைப்பிற்குத் தேவையான சட்ட முறைமை, ஒழுழங்குபடுத்தல் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தல்இ

VI. தொழில்நுட்பத் துறையின் ஏற்றுமதி பங்களிப்பினையும் தேசிய பொருளாதாரத்தின் அறிவு மற்றும் தொழில்சார் சேவைப் பங்களிப்பையும் விரிவுபடுத்துவதற்காக நிறுவன அபிவிருத்த, தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் தொடர்புடைய சேவைகளை விரிவுபடுத்தி அதனை தொழில்நுட்ப நிறுவன பொருளாதாரமாக பரிமாற்றல்,

VII. அமைச்சின் கீழ் வரும் அபிவிருத்திப் பணிகளை நெறிப்படுத்தலும், மேற்பார்வை செய்தலும்,

VIII. அமைச்சின் தொலை நோக்கினை நோக்கி வழிப்படுத்தலும் அமைச்சின் தனிப்பட்ட முகாமைத்துவம்.



## 1.5 நிறுவன கட்டமைப்பு



## 1.6 தொழில்நுட்ப அமைச்சின் கீழான விசேட கருத்திட்டங்கள

### 1.6.1 இலங்கை தனிப்பட்ட டிஜிட்டல் அடையாளம் (SLUDI) கருத்திட்டம்

**(அ) அறிமுகம்**

- தனிப்பட்ட டிஜிட்டல் அடையாளமானது இரண்டு (02) பிரதான அம்சங்களைக் கொண்டது.

    1. இணையத்தில் ஒரு நபரோ அல்லது நிறுவனம் ஒன்றையோ வரையறுக்கும் டிஜிட்டல் சான்றுப்பத்திரம் (Digital ID)

    2. தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டைக்கான (SLUDI) தனித்துவ பாதகாப்பினை செயற்படுத்த டிஜிட்டல் அடையாளத்துடன் உயிர்மஅளவியலை இணைத்தல்.

- டிடீஜிட்டல் சான்றுப்பத்திரத்துடன் உயிர்ம அளவியலை இணைப்பதன் மூலம் ஒரு தனித்துவமான டிஜிட்டல் அடையாளம் அளிக்கப்படுகின்றது. இது ஒரு பிசையை அங்கீகரிப்பதற்கும் பரிவர்த்தனையை நேரடியாகவோ அல்லது நிகழ்நிலையிலோ தடையின்றி மேற்கொள்ள உதவுகிறது.

- இந்த தனித்துவ அடையாள அட்டை UDI ஆனது அரசாங்க நிறுவனங்களால் இயக்கப்படும் பல்வேறு தரவுத் தரங்களில் ஒரு பிரசைதொடர்பான அனைத்துத் தரவுகளுக்கும் தனித்துவமான குறியீட்டுத் திறவுகோலாக மாறுகிறது.

- குடிமகன் ஒருவர் தன்னைப் பறிறய தகவலகளை ஒரு முறை மட்டுமே வழஙகுவதை உறுதி செய்வதே இந்த UDI இனை செயல்படுத்துவதன் நீண்ட கால நோக்காகும்.

**(ஆ) கருத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் நன்மைகள்**

1. அனைத்து இலங்கையர்க்கும் உயிரியல் அடிப்படையிலான அடையாள முறைமையினை உருவாக்கல்.

    அ. ஏனையோர் அடையாளச் செயற்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்காமை

2. டிடீஜிட்டல் அடையாளத்தின் மூலம் ஒவ்வொரு பிரசையும் நிகழ்நிலை கணனி அணுகலை அந்த நபராகவே அணுக முடியுமாதல்.

    அ. சகல அரசாங்க டிஜிட்டல் அமைப்புகளும் அந்த டிஜிட்டல் அடையாள அமைப்பிற்கு உதவுதல்,
    ஆ. விருப்பம் அல்லது அறிவித்தல் மூலம் அரசு ஊடாக (உடன் அல்லது அதற்கு மேல்) தரவுகளைப் பகிர்வதற்கான வசதிகளை ஏற்படுத்தல்.

3. டிடீஜிட்டல் பொருளாதாரத்தின் வழியாக டிஜிட்டல் அரச கட்டடக் கலை உருவாக்கத்தை ஒவ்வொரு தனி நபருக்கும் ஒரு டிஜிட்டல் இரட்டை (அடையாளம்) என்பதை ஏற்படுத்துவதன் மூலம் டிஜிட்டல் பொருளாதாரத்தை செயற்படுத்தல்.

ய. தகவல் முகாமைத்துவத்திற்கான தற்போதைய சட்ட கட்டமைப்புக்கு இடமளிக்கும் கூட்டமைப்பு

டி. ICTA வின் அரச கட்டடக் கலை மீது தங்கியுள்ளது.

- ளுடுருனுஐ திட்டத்தின் செயற்பாட்டு வளர்ச்சியை மேற்பார்வை செய்யவும் மீளாய்வ செய்யவும் இலங்கை இந்திய அரசாங்க பிரதிநிதிகளுடன் ஒருங்கிணைந்த திட்ட முகாமைத்துவ குழுவினை நியமித்தல்.(JPMC)

- SLUDI திட்டத்தை செயற்படுத்தவும் பராமரிக்கவும் பிரதான திட்ட ஒருங்கிணைப்பாளர் (MSI) ஒருவருக்கான விலைமனு கோரலுக்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPC) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) என்பவற்றை நியமித்தல்.

- அடையாளத்திற்கான அமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஒருவரை (ISI) அட்சேர்ப்புச் செய்வதற்கான முன்மொழிவு (RFP) தயார் செய்யப்படுகிறது

## 1.7 எதிர்காலத் திட்டங்கள்

**தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையை அமைத்தல். (DPA)**

2022, 9 ஆம் இலக்க தரவுப் பாதுகாப்புச் சட்டமானது 2022 மார்ச் மாதம் 19 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தரவுப் பாதகாப்பு சட்டத்தினை செயற்படுத்த அமைச்சானது தரவுப் பாதுகாப்பு அதிகார சபையை நிறுவவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. டிஜிட்டல் மயமாக்கலின் மோசமான தாக்கங்களிலிருந்து மக்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்கு இது உதவும்.

# அத்தியாயம் 02 – முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

**அடைவுகள்**

தொழில்நுட்ப அமைச்சானது 2021 ஆம் ஆண்டில் புதிதாக நிறுவப்பட்டது. இது நாட்டின் மொத்த தொழில்நுட்பத் துறையையும் மெம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம், டிஜிட்டல் தொழில்நுட்பம்,தொழில்நுட்ப கொள்கைகளும் தரங்களும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், டிஜிட்டல் பாதுகாப்பு என்பன அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன. டிஜிட்டல் அரசாங்கத்தின் கொள்கைகளை தயாரித்தல், தேசிய சைபர் பாதுகாப்பு இலத்திரனியல் பரிமாற்றுதல்களின் சட்டத்தை மேம்படுத்தல், பாராளுமன்றத்தில் தரவுப் பாதகாப்ப சட்டமூலத்தை அங்கிகரித்தல், அமைச்சின் விடயப்பரப்பிற்கு உடபட்ட துறைகளில் ஏனைய கொள்கைகள்

மூலோபாயங்களின் அபிவிருத்தி என்பன இந்த மீளாய்வுக்கட்பட்ட காலப்பகுதியில் எட்டப்பட்ட முக்கிய சாதனைகளாகக் கொள்ளலாம

**சவால்கள்**

அதிகாரம் பெற்றோரிடம் ஒரு சில கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அங்கிகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியனருக்கு ஏற்ப முழு ஊழியர்களையும் பெற முடியவில்லை. மூன்றாவது மற்றும் நான்காவது நிர்வாகத் தரங்கள் மற்றும் பெரும்பான்மையான உதவி ஊழியர்கள் இன்னும் அமைச்சிற்கு ஒதுக்கப்படவில்லை.

புதிதாக நிறுவப்பட்ட அமைச்சாக உள்ளதால் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திராதிகள் என்பன அவசியமாக உள்ளன. பெரும்பாலானவை இன்னும் வழங்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

பொருட்கள் சேவைகள் என்பவற்றில் விலை அதிகரிப்ப காரணமாக அலுவலகத்தின் பகுதி பிரிக்கும் பணிகளை உரிய நேரத்தில் நிறைவு செய்ய முடியாதுள்ளது.

**எதிர்கால இலக்குகள்**

தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகம் ஒன்றினை கட்டியெழுப்பும் நோக்கத்திற்காக உரிய நிறுவனங்களுக்க வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

I. மக்களை மையப்படுத்திய டிஜிட்டல் ஆளுகை அமைப்பொன்றை உருவாக்க வழிகாட்டலும், பங்களிப்புச் செய்தலும்..

II. சர்வதேச கண்டுபிடிப்புகளுக்கான நிலையம் ஒன்றினை நிறுவுவதற்க பங்களிப்பச் செய்தல்.

III. டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இலங்கையை தாபிப்பதற்கு இலக்கு வைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் கருத்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்தலும் கண்காணித்தலும்.

IV. தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும் அந்நிய செலாவணியை ஈட்டவும் வழிவகுக்கும் தகவல் தொழில்நுட்ப முயற்சியாண்மை அபிவிருத்தி ஊடாக இலங்கை புத்தாக்க மற்றும் ஆராய்ச்சி நிலையமாக உருவாகியுள்ளது.



# அத்தியாயம் 03– 31 டிசம்பர் 2022 இற்கு முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதியியல் செயலாற்றுகை

**ACA-F**

## 3.1 நிதியியல் செயலாற்றுகைக்கான அறிக்கை

**2022 டிசம்பர் 31 இற்கான காலப்பகுதி**

ACA -F

**Statement of Financial Performance**
**for the period ended 31st December 2022**

| Budget 2022 | | Note | Actual 2,022 | Actual 2,021 | |
|---|---|---|---|---|---|
| Rs. | | | Rs. | Rs. | |
| | **Revenue Receipts** | | | - | |
| - | Income Tax | 1 | - | - | ACA-1 |
| 2,050,000,000 | Taxes on Domestic Goods & Services | 2 | 16,755,636,726 | 14,702,641,869 | ACA-1 |
| - | Taxes on International Trade | 3 | - | - | ACA-1 |
| - | Non Tax Revenue & Others | 4 | 1,441,442 | 465,438 | ACA-1 |
| **2,050,000,000** | **Total Revenue Receipts (A)** | | 16,757,078,168 | 14,703,107,307 | |
| | **Non Revenue Receipts** | | - | - | |
| - | Treasury Imprests | | 1,870,383,000 | 3,065,150,000 | ACA-3 |
| - | Deposits | | 10,100 | 60,620 | ACA-4 |
| 300,000 | Advance Accounts | | 942,794 | 149,554 | ACA-5 |
| - | Other Main Ledger Receipts | | - | - | |
| **300,000** | **Total Non Revenue Receipts (B)** | | **1,871,335,894** | **3,065,360,174** | |
| **2,050,300,000** | **Total Revenue Receipts & Non Revenue Receipts C = (A)+(B)** | | **18,628,414,062** | **17,768,467,481** | |
| | **Remittance to the Treasury (D)** | | - | - | |
| | **Net Revenue Receipts & Non Revenue Receipts E = (C)-(D)** | | **18,628,414,062** | **17,768,467,481** | |
| | **Less: Expenditure** | | | | |
| | **Recurrent Expenditure** | | | | |
| 30,500,000 | Wages, Salaries & Other Employment Benefits | 5 | 23,087,957 | 10,860,605 | ACA-2(ii) |
| 68,140,000 | Other Goods & Services | 6 | 49,950,929 | 32,367,929 | ACA-2(ii) |
| 1,093,200,000 | Subsidies, Grants and Transfers | 7 | 934,108,322 | 973,052,606 | ACA-2(ii) |
| - | Interest Payments | 8 | - | - | ACA-2(ii) |
| - | Other Recurrent Expenditure | 9 | - | - | ACA-2(ii) |
| **1,191,840,000** | **Total Recurrent Expenditure (F)** | | **1,007,147,208** | **1,016,281,139** | |
| | **Capital Expenditure** | | | | |
| 1,400,000 | Rehabilitation & Improvement of Capital Assets | 10 | 4,051,813 | - | ACA-2(ii) |
| 4,800,000 | Acquisition of Capital Assets | 11 | 5,849,020 | 705,679,440 | ACA-2(ii) |
| 1,900,000,000 | Capital Transfers | 12 | 1,194,501,042 | 1,613,453,212 | ACA-2(ii) |
| - | Acquisition of Financial Assets | 13 | - | - | ACA-2(ii) |
| 200,000 | Capacity Building | 14 | 196,820 | - | ACA-2(ii) |
| 630,000,000 | Other Capital Expenditure | 15 | 215,005,080 | 332,711,456 | ACA-2(ii) |
| **2,536,400,000** | **Total Capital Expenditure (G)** | | **1,419,603,775** | **2,651,844,108** | |
| - | Deposit Payments | | 13,200 | 32,520 | ACA-4 |
| 3,500,000 | Advance Payments | | 2,250,435 | 2,184,455 | ACA-5 |
| - | Other Main Ledger Payments | | - | - | |
| **3,500,000** | **Total Main Ledger Expenditure (H)** | | **2,263,635** | **2,216,975** | |
| **3,731,740,000** | **Total Expenditure I = (F+G+H)** | | 2,429,014,618 | 3,670,342,222 | |
| | **Balance as at 31st December J = (E-I)** | | 16,199,399,444 | 14,098,125,259 | |
| | **Balance as per the Imprest Reconciliation Statement** | | 16,199,399,444 | 14,098,125,259 | ACA-7 |
| | **Imprest Balance as at 31st December** | | - | - | ACA-3 |
| | | | 16,199,399,444 | 14,098,125,259 | |

1

## 3.2 நிதியியல் நிலை அறிக்கை

**ACA-P**

**நிதியியல் நிலை அறிக்கை 2022**

**2022 டிசம்பர் 31 இற்கு**

ACA-P

**Statement of Financial Position**
**As at 31st December 2022**

| | Note | Actual 2022 Rs | Restated 2021 Rs |
|---|---|---|---|
| **Non Financial Assets** | | | |
| Property, Plant & Equipment | ACA-6 | 713,569,740 | 705,635,240 |
| **Financial Assets** | | | |
| Advance Accounts | ACA-5/5(a) | 3,342,542 | 2,034,901 |
| Cash & Cash Equivalents | ACA-3 | - | - |
| **Total Assets** | | **716,912,282** | **707,670,141** |
| **Net Assets / Equity** | | | |
| Net Worth to Treasury | | 3,317,542 | 2,006,801 |
| Property, Plant & Equipment Reserve | | 713,569,740 | 705,635,240 |
| Rent and Work Advance Reserve | ACA-5(b) | | |
| **Current Liabilities** | | | |
| Deposits Accounts | ACA-4 | 25,000 | 28,100 |
| Unsettled Imprest Balance | ACA-3 | - | - |
| **Total Liabilities** | | **716,912,282** | **707,670,141** |

Detail Accounting Statements in ACA format Nos. 1 to 7 presented in pages from 7 to 29 and Annexures to accounts presented in pages from 30 to 30 form an integral part of these Financial Statements. The Financial Statements have been prepared in complying with the Generally Accepted Accounting Principles whereas most appropriate Accounting Policies are used as disclosed in the Notes to the Financial Statements and hereby certify that figures in these Finacial Statements, Notes to accounts and other relevant accounts were reconciled with the Treasury Books of Accounts and found in agreement.

We hereby certify that an effective internal control system for the financial control exists in the Reporting Entity and carried out periodic reviews to monitor the effectiveness of internal control system for the financial control and accordingly make alterations as required for such systems to be effectively carried out.

| Chief Accounting Officer | Accounting Officer | Chief Financial Officer/ Chief Accountant/ Director (Finance)/ Commissioner (Finance) |
|---|---|---|
| Name : | Name : | Name : |
| Designation : Secretary | Designation : Secretary | Designation : |
| Date : Ministry of Technology | Date : Ministry of Technology | Date : K.D. Dilgepa Rathnayake, Cheif Financial Officer, Ministry of Technology |

2

## 3.3 காசுப் பாய்ச்சுகை அறிக்கை

**ACA-C**

### காசுப் பாய்ச்சுகை அறிக்கை
### 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கானது

| | உண்மையான | |
|---|---|---|
| | 2022<br>ருபா. | 2021<br>ருபா. |
| **<u>செயற்பாட்டு நடவடிக்கைகின் பணப்புழக்கம்</u>** | | _ |
| மொத்த வரி பற்றுச்சீட்டுகள் | | 14,702,641,869 |
| கட்டணம், அபராதம், தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | - | - |
| ஆதாயம் | - | - |
| வருவாய் அல்லாத வரவுகள் | 1,441,442 | 465,438 |
| ஏனைய வருவாய் தலைப்பகளில் பெறப்பட்ட வருவாய் | - | - |
| பெறப்பட்ட கட்டுநிதி | 1,870,383,000 | 3,065,150,000 |
| முற்பணத்திலிருந்து பெறப்பட்டவை | 754,584 | 149,554 |
| பெறப்பட்ட வைப்புகள் | 10,100 | 60,620 |
| **செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த பணம்ழளெ (A)** | **1,872,589,126** | **17,768,467,481** |
| ***<u>கழி- நிதி வழங்கப்பட்டது:</u>*** | | |
| துனிப்பட்ட ஊதியங்கள் மற்றும் செயற்பாட்டு கொடுப்பனவுகள் | 72,940,736 | 33,635,563 |
| உதவித்தொகை மற்றும் பரிமாற்ற கொடுப்பனவு | 644,108,322 | 674,223,506 |
| பிற தலைப்புக்களின் சார்பாக மேற்கொண்ட செலவினம் | 5,349,158 | 93,500,000 |
| திறைசேரிக்கான கட்டநிதி தீர்வு | - | 14,702,641,869 |
| முற்பணக் கொடுப்பனவு | 1,160,889 | 1,400,371 |
| வைப்புக் கொடுப்பனவு | 13,200 | 32,520 |
| **செயற்பாடுகளுக்க வழங்கப்பட்ட மொத்த தொகை (டீ)** | **723,572,305** | **15,505,433,828** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான நிகர பணப்புழக்கம் (C )=(A)-(B)** | **1,149,016,821** | **2,263,033,653** |
| **<u>முதலீடுகளின் பணப்புழக்கம்</u>** | | |
| வட்டி | - | - |

| | | |
|---|---|---|
| ஈவுத்தொகை | - | - |
| பங்கு விலக்கல் வருமானம், பௌதிக சொத்துக்களின் விற்பனை | - | - |
| கடன்களின் வருமானம் | - | - |
| **முதலீடகளிலிருந்து பெறப்பட்ட மொத்த தொகை (D)** | **-** | **-** |
| ***கழி- நிதி வழங்கப்பட்டது:*** | | |
| பௌதிக சொத்துக்களின் கொள்வனவு நிர்மாணம் அல்லது கைப்பற்றல் மற்றும் ஏனைய முதலீடுகளின் கைப்பற்றல் | 1,149,200,691 | 2,263,033,653 |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்கான மொத்த தொகை (E)** | **1,149,200,691** | **2,263,033,653** |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்கான நிகர பணப்புழக்கம் ( F)=(D)-(E)** | **(1,149,200,691)** | **(2,263,033,653)** |
| **செயற்பாடு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான நகர பணப்புழக்கம் (G)=( C) + (F)** | **0** | **0** |
| **<u>நிதியியல் செயற்பாடுகளின் பணப்புழக்கம்</u>** | | |
| உள்ளூர் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெறப்பட்ட அளிப்புகள் | - | - |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட மொத்த தொகை (H)** | **-** | **-** |
| ***கழி: வழங்கப்பட்ட பணம்:*** | | |
| உள்ளூர் கடன்களை மீளச் செலுத்தல் | - | - |
| வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்தல். | - | - |
| **நிதி நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த தொகை (I)** | **-** | **-** |
| **நிதி நடவடிக்கைகளுக்கான நிகர பணப்புழக்கம் (J)=(H)-(I)** | **-** | **-** |
| **நிகர பண இயக்கம் (K) = (G) + (J)** | **0** | **0** |
| **சனவரி 01 இற்கு ஆரம்ப ரொக்க மிகுதி** | **0** | **0** |
| **டிசம்பர் 31 இற்கு ரொக்க மிகுதி** | **0** | **0** |

## 3.4 நிதியியல் அறிக்கைக்கான குறிப்புகள்

| அறிக்கையிடலின் அடிப்படை | |
|---|---|
| 1) | அறிக்கையிடும் காலப்பகுதி |
| | |
| | இந்த நிதியியல் அறிக்கை 01 சனவரி இலிருந்து 31 டிசம்பர் 31 வரையானது. |
| 2) | அளவீட்டின் அடிப்படை |
| | இந்த நிதி அறிக்கையானது சில சொத்துக்களின் மீள் மதிப்பீட்டால் திரத்தியமைக்கப்பட்ட வரலாற்று செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. அவ்வாறு இல்லையெனில் குறிப்பிட்டு காண்பிக்கப்படவில்லையாயின் நவீனமயப்படுத்தப்பட்ட நிதி அடிப்படையில் கணக்கிடப்பட்டது. |
| | நிதியியல் அறிக்கைகளின் புள்ளிவிபரங்கள் இலங்கை ருபாவில் அதற்க அண்மித்த ருபாவிற்கு முழமைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. |
| 3) | வருவாயை அங்கீகரித்தல் |
| | பரிமாற்றம் அல்லது பரிமாற்றமல்லாத வருவாய்கள் உரிய வருவாயக் காலத்தைப் பொருட்படுத்தாமல் கணக்காண்டின் பெறுதல்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. |
| 4) | சொத்து பொறி மற்றும் உபகரணங்களின் அங்கீகாரம் மற்றும் அளவீடு (PP&E) |
| | சொத்து, பொறி, உபகரணங்களின் ஒரு உருப்படியானது சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார பயன்கள் நிறுவனத்திற்கு கிடைக்கும்போதும் நம்பத்தகுந்த வகையில் சொத்துக்களின் விலையை அளவிட முடியும்போது மட்டுமே அங்கீகரிக்கப்படுகிறது. |
| | PP&E என்பன செலவினத்தின்படி அளவிடப்படுவதோடு செலவின மாதிரி பொருந்தாதவிடத்து அது மீள் மதிப்பிட்டு மாதிரியாகக் கொள்ளப்படுகிறது. |
| 5) | சொத்துக்கள், பொறி, மற்றும் உபகரணங்களின் இருப்பு |
| | இக் கணக்கானது சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்புடைய கணக்காகும். |
| 6) | பணம் மற்றும் பணத்மிற்கு சமமானவை |
| | பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகளில் 2022 டிசம்பர் 31 இற்கு கையில் உள்ள உள்ளுர் நாணயங்கள் மற்றும் கரன்சிகள் அடங்கும். |

## 3.5 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

**ACA - 1(ii)**

**அசல் வருவாய் மதிப்பீட்டிற்கும் திருத்திய வருவாய் மதிப்பீட்டிற்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான விளக்கம்**

**வருமான கணக்கு அலுவலர் : தொழில்நுட்ப அமைச்சு** **செலவினத் தலைப்பு :186**

**Rs.**

| வருவாய்க் குறியீடு | விபரம் | உண்மையான வருவாய் மதிப்பீடு | மீள் திருத்திய வருவாய் மதிப்பீடு | உண்மையான வருவாய் மதிப்பிட்டின் வேறுபாடு % | வேறுபாடுகளுக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| 1002.11.00 | தொலைத்தொடர்பு வரி | 18,000,000,000 | - | | |
| 1002.14.00 | செலுலர் டவர் வரி | 1,500,000,000 | - | | |
| 1002.15.00 | SMS விளம்பர வரி | 550,000,000 | - | | |

## 3.6 நிதி ஒதுக்கீட்டு பாவனையின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின்பயன்படுத்திய ஒதக்கீடு % |
|---|---|---|---|---|
| | உண்மையானது | இறுதி | | |
| மீண்டெழும் | 1,006,315,000 | 1,089,190,440 | 1,016,281,139.44 | 93% |
| மூலதனம் | 8,371,890,000 | 8,371,890,000 | 2,651,844107.95 | 32% |

## ளள3.7 நி.ஒ.208 இன்படி அமைச்சின் செலவினங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு

Rs. ,000

| தொடர் இல. | எந்த அமைச்சு திணைக்களத்திலிருந்து பெறப்பட்டது | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின்பயன்படுத்திய ஒதக்கீடு % |
|---|---|---|---|---|---|---|
| | | | உண்மையானது | இறுதியானது | | |
| | இல்லை | | | | | |

## 3.8 நிதி அல்லாத சொத்துக்களின் செயலாற்றுகை அறிக்கை

Rs. ,000

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | ஆய்வுச் சபையின் அறிக்கையின்படி 2019.12.31 இற்கான மிகுதி | நிதி நிலை அறிக்கையின் படி 31.12.2019 இற்குமிகுதி | கணக்கிடப்பட உள்ளது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்களும் மாதிரிகளும் | | | | |
| 9152 | இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | 56,352,400 | 5,635,240.00 | | 100% |
| 9153 | காணி | | | | |
| 9154 | புலனாகா சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | 700,000,000.00 | | 100% |
| 9160 | நடைபெற்றுவரும் பணிகள் | | | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | | | | |

## 3.9கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

### 3.9 கண்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

செயலாளர்,

தொழில்நுட்ப அமைச்சு

தலைப்பு – 186, தொழில்நுட்ப அமைச்சின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிறைவடையும் ஆண்டிற்கான நிதி அறிக்கை தொடர்பில் 2018 இல 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வு அறிக்கையின் 11(1) உறுப்புரையின்படி கணக்காய்வாளரின் சாராம்ச அறிக்கை

### 1. நிதி அறிக்கை
### 1.1 நிலை கணிப்பீட்டிற்கான கருத்து

தலைப்பு -186, தொழில்நுட்ப அமைச்சின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை அறிக்கை, அத்தினத்தில் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்திறன் அறிக்கை மற்றும் நிதிப் பாய்ச்சுகை அறிக்கைகளுடன் கூடிய 2022 டிசம்பர் 31 ஆ ம் திகதிக்கு நிறைவடையும் ஆண்டிற்கான நிதி அறிக்கையானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் விதிமுறைகளுடன் கூட்டாக வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் அண்டின் 1இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) உறுப்புரையின்படி தொழில்நுட்ப அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந் நிதி அறிக்கை தொடர்பான எனது கருத்துக்களும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அறிக்கையின் 11 (2) உறுப்புரையின்படி எதிர்காலத்தில் பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலருக்கு வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 154(6) ஆம் சட்டத்துடன் கூட்டாக வாசிக்கப்படவேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின்படி சமர்ப்பிக்கப்படவேண்டிய கணக்காய்வு அறிக்கையானது எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ் வறிக்கையின் 1.6 உறுப்புரையில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கான தாக்கங்களை விடுத்து, நிதி அறிக்கைகளில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தொழில்நுட்ப அமைச்சின் நிதி நிலைமகள் மற்றும் அத் திகதிக்கு நிறைவடையும் ஆண்டிற்கான அதன் நிதி நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சுகை என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் அடிப்படைகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை வெளிப்படுத்தும் என்பது எனது கருத்தாகும்.

### 1.2 நிலை கணிப்பீட்டின் கருத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து கணிப்பிடப்படும். இலங்கையின் கணக்காய்வுத் தரங்களின் (இ.க.த.) பிரகாரம் நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். நிதி அறிக்கை தொடர்பிலான எனது பொறுப்பு, கணககாய்வாளரின் பொறுப்பு எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்து தொடர்பில் அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெறப்பட்ட கணக்காய்வு சாட்சிகள் போதுமானவையும் பொருத்தமானவையுமாகும் என்பதுவே எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதி அறிக்கைகள் தொடர்பில் பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர் மற்றும் கணக்குக் கொடுக்கும் அலுவலரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் அடிப்படைகளின் பிரகாரமும் 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையில் காண்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை வெளிக்காட்டும் வகையில் நிதி அறிக்கைகளை தயாரிப்பதும் மோசடி மற்றும் பிழைகள் தொடர்பில் ஏற்படும் பொய்யான அறிக்கைகள் இன்றி நிதி அறிக்கைகளை தயார் செய்வதற்கு முடியுமான வகையில் தேவைப்படும் உள்ளக நிர்வாகத்தினை தீர்மானிப்பது பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலரின் பொறுப்பாகும்.

2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உறுப்புரையின்படி அமைச்சினால் வருடாந்த மற்றும் தற்கால நிதி அறிக்கைகளைத் தயார் செய்வதற்கு முடியுமான வகையில் சுய வருமானம்,செலவுகள்,சொத்து மற்றும் வரவுகள் தொடர்பில் கிரமமான கையேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப உறுப்புரையின்படி அமைச்சின் நிதி நிர்வாகத்திற்கு பலனளிக்கக்கூடிய நிர்வாக கட்டமைப்பு ஒன்றினை தயார் செய்து கொண்டு நடத்தப்படுவதனை பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர் சான்றளிப்பதுடன் அக்கட்டமைப்பின் உற்பத்தித் திறன் தொடர்பில் காலத்திற்குக் காலம் மீளாய்வினை மேற்கொண்டு அதன்படி கட்டமைப்பினை செயற்திறனான வகையில் கொண்டு செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதி அறிக்கைக் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதி அறிக்கைகள், மோசடி மற்றும் பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய பொய்யான அறிக்கைகள் இல்லாதவை என்பதற்கான நியாயமான சான்றினை பெற்றுக் கொடுப்பது மற்றும் எனது கருத்தை உள்ளடக்கிய அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுப்படுத்தல் என்பது உயர் மட்ட சான்று என்றபோதிலும், இலங்கை கணக்காய்வுத் தரங்களின்படி கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொய்யான அறிக்கையினை வெளிப்படுத்தும் என்பதனை உறுதி செய்வதாக அமையாது. மோசடி மற்றும் பிழைகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கம் செலுத்துவதனால் பிரமாண பொய் அறிக்கைகள் ஏற்படுவதோடு, அதன் பிரமாணத் தன்மையானது இந்த நிதி அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பயனாளர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் ஏற்படும் தாக்கத்தில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு தரங்களின்படி கணக்காய்வின் ஒரு பிரிவாக கணக்காய்வின்போது தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் அமைப்பு ரீதியாக நான் செயல்பட்டேன். மேலும் என்னால்.

- வெளியிடப்பட்ட கணக்காய்வு கருத்திற்கு அடிப்படை ஒன்றினை வழங்கும்போது மோசடி அல்லது பிழைகள் காரணமாக நிதி அறிக்கைகளில் ஏற்படக்கூடிய பிரமாண பொய் அறிக்கைகள் ஏற்படும் அபாயத்தினை அடையாளம் காண்பதும் மதிப்பீடு செய்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது. பிழையாக காண்பித்தல் காரணமாக ஏற்படும் பிரமாண பொய்யான அறிக்கைகளினால் ஏற்படும் தாக்கத்திற்கு மேலாக மோசடியினால் ஏற்படும் தாக்கமானது அவை கெட்ட கூட்டமைப்பு, போலியான ஆவணங்களின் தயாரிப்பு, வேண்டுமென்றே தவிர்த்தல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக நிர்வாகத்தினை தவிர்த்தல் போன்ற காரணிகளால் சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

- உள்ளக நிர்வாகத்தின் செயற்திறன் தொடர்பில் கருத்தொன்றினை வெளியிடும் நோக்கத்தில் அல்லாது சந்தர்ப்பத்திற்கேற்ற பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை தயாரிப்பதற்கு உள்ளக நிர்வாகம் தொடர்பில் புரிந்து கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல் உள்ளடங்கிய நிதி அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் தொடர்பில் காரணமான கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்களை பொருத்தமானதும் நியாயமானதுமான முறையில் நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதனை மதிப்பிடல்.

- நிதி அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்குக் காரணமாக அமைந்த கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் பகிரங்கப்படுதல் உள்ளடங்கிய நிதி அறிக்கைகளின் முழுவதுமான சமர்ப்பித்தல் பாராட்டப்பட்டது.

ஏனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர் அறிவுறுத்தப்பட்டார்.

### 1.5 வேறு சட்டத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) பந்தியின்படி நிதி அறிக்கையானது முன்னைய வருடத்துடன் ஒத்திருப்பதனை வெளிப்படுத்துகிறேன்.

### 1.6 நிதி அறிக்கைகள் தொடர்பாக கருத்துக் கூறல்

#### 1.6.1 நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) அமைச்சின் கீழ் இருந்த நிறுவனமான இலங்கை நெனோ தொழில்நுட்ப (தனி) நிறுவனத்தின் (SLINTEC) கட்டடத்தினை நிர்மாணிப்பதற்கு கடந்த வருடங்களில் செலவிடப்பட்ட ருபா.700,000,000 அமைச்சின் சொத்தாக நிதி நிலைமை தொடர்பான அறிக்கையின் மொத்தத் தொகை ருபா.713,569,740 ஆக சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலக்கம் 186-2-03-009-2509 செலவுத் தலைப்பின் கீழ் மீளாய்விற்கான ஆண்டில் ருபா.5,190,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட (20) மடிக்கணனிகளின் பெறுமதியானது நிதி நிலைமை அறிக்கையில் சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்படவில்லை.

#### 1.6.2 வாடகை மற்றும் வேலை முற்பணம், வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கீட்டுக் கணக்கு

வன் கோல்பேஸ் கோபுரத்தின் பதினோராம் மாடியில் அமைச்சினை நடத்திச் செல்வதற்கு எற்படுத்தப்பட்ட குத்தகை வாடகைக்கான உடன்படிக்கையின்படி ஆரம்ப வைப்புப் பணமாக ருபா.4,206,720 செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றுநிருப இலக்கம் 250/2016 (i) இன்படி அரச அலுவலக கட்டடங்களுக்கான வாடகைக்காக முற்பணம் செலுத்துவதனை குடியரசுக் கணக்கில் வெளிப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு முற்பணமும் 91888 – வாடகை மற்றும் வேலை முற்பண கணக்கு மற்றும் 9189- வாடகை மறறும் வேலை முற்பண ஒதுக்கீட்டுக் கணக்கு என்ற பிரதான பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

நிதி ஒழுங்குவிதிகள் 50 (ii) பிரகாரம் மதிப்பீடுகள் முடிந்தவரையில் முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பது பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலரின் பொறுப்பெனினும், அதன்படி சரியான முறையில் நடவடிக்கை எடுக்காமை அல்லது செலவு முயாமைத்துவத்தின் குறைபாடுகள் காரணமாக ஏழு செலவு விடயங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தொகையான ரூபா.2,150,000 இற்கான ஒதுக்கீடு முழுமையாக எஞ்சியிருந்ததுடன் இரண்டு செலவு விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகையான ரூபா.1,400,000 இற்கான ஒதுக்கீட்டில் ரூபா.950,000 ஆனது வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் ரூபா. 450,000 இற்கான ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

### 2.2 அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புகளின் முன்னெடுப்பு

2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் 27 ஆம் திகதிய இல. 255கூ2017 இனைக் கொண்ட அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்கு ஆண்டிற்கான அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புக்களை அடையாளம் காணப்படுவதோடு,அச்சுற்று நிருபத்தின்படி ரூபா. 183,248 பெறுமதியான பொறுப்புக்கள் மற்றும் வரவுகளை அடையாளம் கண்டு 2022 ஆம் ஆண்டின் நிதி அறிக்கையில் பொறுப்புக்கள் மற்றும் வரவுகளின் கீழ் உள்ளடக்கப்ட்டிருக்கவில்லை எனினும் 2023 முதற் காலாண்டில் இப் பொறுப்புக்கள் மற்றும் வரவுகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்ட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

#### 3.1.1 கடமைகளை நிறைவேற்றாமை

(அ) இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் ரூபா. 40 மில்லியன்களுக்கான செலவினத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மொத்த செலவினம் ரூபா. 26.52 இற்கான செலவினை மேற்கொண்டு பகுப்பாய்வு திணைக்களத்தற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வு (ICT Solution for Gov. Analyst Dept-GAD) வேலைத்திட்டத்தின் செயற்பாடுகளில் நூற்றிற்கு 75 விகிதம் நிறைவடைந்ததன் பின்னர் அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்பின் உருப்படிகள் மற்றும் நிறுவனத்தின் தேவைகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டமை அறியப்பட்டதன் காரணமாக அவ்வேலைத்திட்டமானது இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் கீழ் செயற்படும் Lanka Government Network 2.0 திட்டத்தினை முறையான சாத்தியக்கூறிற்கான ஆராய்வினை மேற்கொள்ளாது ரூபா. 12,737.29 மில்லியன்களுக்கு மதிப்பீடு செய்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா.5,839,26 இற்கான தொகை செலவிடப்பட்டிருந்தது. 2022 நவம்பர் மாதம் பிரதமர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின்படி 140 புதிய நிறுவனங்களின் வலையமைப்பு இதுவரை மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் வலையமைப்பு மேற்கொள்ளப்பட்ட 860 நிறுவனங்களில் சில அவற்றை ஒதுக்கிவிட்டு தனியார் நிறுவனங்களின் மூலம் அவ்வசதிகளைப் பெற்றுக்கொள்ள முனைந்திருந்தமை கண்டறியப்பட்டது.

(இ) இலங்கை கணனி அவசரகால பதிலளிப்பு மன்றத்தின் கீழ் 09 வேலைத்திட்டங்களுக்காக ரூபா.1,460.99 மில்லியன்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டின் நிறைவில் இந்த 09 வேலைத்திட்டங்களுக்கும் ரூபா. 274.07 மில்லியன்கள் செலவிடப்பட்டிருந்ததுடன் இவற்றுள் 03 வேலைத்திட்டங்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிறைவடைய வேண்டியிருப்பினும் அவற்றுள் எந்தவொரு வேலைத்திட்டமும் அத்தினத்திற்கு நிறைவடைந்திருக்கவில்லை. எஞ்சிய வேலைத்திட்டங்கள் வருடத்திற்குள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப் பட்டிருந்தாலும், எஞ்சிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்கான முறையான திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இதற்குப் போதுமான கண்காணிப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

(அ) தொழில்நுட்ப அமைச்சினை நடத்திச் செல்வதற்கு 7,512 சதுர அடிகளைக் கொண்ட இடப்பகுதியானது மாதாந்தம் ரூபா.1,878,000 இனை செலுத்தும் அடிப்படையில் 2021 ஜுன் மாதம் 22 ஆம் திகதியன்று 05 வருடத்திற்கான குத்தகை உடன்படிக்கை ஒன்று தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதில் 2,217 சதுர அடிகள் பயன்படுத்தப்படாமல் இருந்ததனால் 2022 ஜுலை மாதம் 12 ஆம் திகதி சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு மீள கையளிக்கப்பட்டது. அக்காலகட்டத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா. 6,651,000 தொகையானது செயற்பாடற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 09 நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்குடன் ரொபோ தொழில்நுட்பம் தொடர்பான திறன்மிகு நிலையம் (Centre of Excellence in Robotic Applications) இனை தாபிப்பதற்கு அப்போதைய கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் மூலம் ரூபா.189,909,295 செலவிடப்பட்டு நிர்மாணப் பணிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் மேற்கூறிய 09 நோக்கங்களும் நிறைவேற்றப்படாமல் காணப்பட்டது.

(இ) ரொபோ தொழில்நுட்ப நிலையத்திற்கென 3000 சதுர அடிகள் கொண்ட இரண்டு கேட்போர் கூடங்கள் 10 குளிரூட்டும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு தளவிரிப்புகள் இடப்பட்டு தரைத் திட்டம் (Floor Plan) தயாரிக்கப்பட்டிருந்தது. இதற்குக 2018 ஆம் அண்டில் ரூபா. 40 மில்லியன்கள் செலவிடப்பட்டு தாபிக்கப்பட்ட Robert Arm இயந்திர வேலைத்திட்டமானது செயற்படத்தப்படாமையினால் கைத்தொழில் அபிவிருத்தி சபை மூலம் இத்திட்டத்திற்கான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பாவிக்கப்பட்டுவருவது அவதானிக்கப்பட்டது.

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

மீளாய்விற்கான ஆண்டில் நிதி செயலாற்றுகை அறிக்கையின் வருமானதின் கீழ் தேசிய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியாக ரூபா.16,755,636,726 காண்பிக்கப்பட்டுள்ள தொகையானது தொலைத்தொடர்புகள் ஒழுங்காக்கல் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்பட்டு திறைசேரிக்கு அனுப்பப்பட்டதும் திறைசேரியினால் சிகாஸ் (CIGAS) திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பெறுமதியாகும் என்பதோடு அவ்வருமானத்தின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு திறைசேரியினால் சிகாஸ் வேவைலைத்திட்டத்திற்கு உட்படுத்தப்பட்ட பெறுமதியுடன் கூடிய ஆவணம் தவிர தேவையான தகவல்கள் அமைச்சிடம் காணப்படவில்லை என்பதுடன் அவ்விபரங்களை சம்பந்தப்பட்ட நிறுனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் ஒழுங்காக்கலுக்காக அமைச்சு மற்றும் அந்நிறுவனத்திற்கு இடையில் ஒழுங்கான நடைமுறை எதுவும் இருக்கவில்லை என்பதனை அவதானிக்க முடிந்தது.

யூ.என். அழுத்கே
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் கணக்காய்வாளர் அதிபதிக்காக

எனது இல. MOT/ISN/DO02/11

கணக்காய்வாளர் அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்
பத்தரமுல்லை.

**தலைப்பு 186- தொழில்நுட்ப அமைச்சின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்று தொடர்பில் 2018 இல 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பந்தியின்படி வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை**

தலைப்பு 186 – தொழில்நுட்ப அமைச்சின் 20222 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிறைவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்று தொடர்பாக தங்களது 2023.10.09 ஆம் திகதிய இலக்கம் IMT/C/MOT/MR/2022 இனைக் கொண்ட கணக்காய்வு விசாரணை மூலம் கோரப்பட்ட தகவல்களை கீழே உள்ளவாறு சமர்ப்பிக்கின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கருத்துக் கூறல்**

**1.2.1 கணக்கியல் குறைபாடுகள்**

(ை). நெனோ தொழில்நுட்ப நிறுவனத்தின் சொத்துக்கள் தொழில்நுட்ப அமைச்சின் கணனிக் கணக்குக் கட்டமைப்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு கல்வி அமைச்சிற்குப் பொறுப்பளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ை) 2023 மார்ச் மாதம் CIGAS வேலைத்திட்டத்தின மூலம் தங்களால் காண்பிக்கப்பட்டுள்ள 20 மடிக்கணனிகள் சொத்துக்கள் உபகரணங்களின் கீழ் அமைச்சின் சொத்துக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஆ) தொழில்நுட்ப அமைச்சு இயங்கி வரும் கட்டடத்தின் வாடகை முற்பணமானது வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு மற்றும் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு எனும் பிரதான பதிவேட்டு கணக்கின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

செலவின மதிப்பீட்டினை ஒழுங்காகத் தயாரிப்பதற்கு குறித்துக் கொண்டேன்.

2.2 2023 ஆம் ஆண்டிற்கான வருமான ஆவணம் ஒன்றினை ஒழுங்காகப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, அர்ப்பணிப்பு மற்றும் வருமானம் கடைசியான நிதிக் கூற்றில் உள்ளடக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பொறுப்பான பணிகளை மேற்கொள்ளாமை**

(அ) வேலைத் திட்டத்தினை தேர்ந்தெடுக்கும்போது சாத்தியமான ஆராய்வு மற்றும் தேவைகளை சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு அது தொடர்பில் அமைச்சின் மூலம் ஒழுங்கான கண்காணிப்பினை மேற்கொள்வதற்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

(ஆ) தங்களது பரிந்துரையின்படி எதிர்காலத்தில் சாத்தியக்கூறிற்கான ஆராய்வினை மேற்கொண்டு வேலைத் திட்டங்களை செயற்படுத்தவும், வேலைத்திட்த்தினை நடைமுறைப்படுத்தும் பின்னூட்டத்தினை பெற்று, வேலைத்திட்டத்தின் செயலாற்றுகையினை மதிப்பிடல், செயலாற்ற அறிக்கையினைப் பெறல், மதிப்பிடல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தி தேவையான பணிகளை மேற்கொள்வதற்கும் அமைச்சு மூலம் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) இலங்கை கணனி அவசர பதிலளிப்பு மன்றத்தின் செயலாற்றுகையினை காலாண்டுக் கொருமுறை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேலைத்திட்டங்கள் நிறைவுறும் காலம் தொடர்பாக மற்றும் ஆண்டிற்கான திட்டத்தினபடி திட்டங்களை செயற்படுத்தல் தொடர்பாகவும் மீளாய்வ செய்வதற்கு நடவடிகளைக எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) மேற் கூறப்பட்டவாறு அமைச்சின் கீழ் காணப்படும் அரசாங்க நிதியை செலவிடும் நிறுவனங்கள் தொடர்பாக சரியான முறையில் கண்காணிப்புச் செய்து பணிப்பொறுப்பினை கிரமமான முறையில் நிறைவேற்றுவதாக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்தி உறுதி செய்து கொள்வதற்கான வேலைத் திட்டம் ஒன்றினை தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேன்.

### 3.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

(அ)அமைச்சு இயங்கிவரும் கட்டடத்தின் வாடகையானது தற்காலத்தில் ஏனைய கட்டடங்களுக்கான வாடகையுடன் சமமானதாக காணப்படுவதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலவசமாக பெற்றுக் கொள்ளவும் கூடியதான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. அதன்படி இனிமேலும் குறைந்த செலவினத்தில் இந்நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு குறித்துக் கொண்டேன்.

(ஆ) இந்த உபகரணங்களைப் பாவித்து வேலைத்திட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான வளங்களை ஒழுங்கான முறையில் அமைச்சிடம் பொறுப்பளிப்பதற்கு பரந்த அளவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி உள்ளதனால் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக் கொண்டுள்ளேன்.

(இ) ROBOT ARM இயந்திர உபகரணங்களை எதிர்காலததில் சரியான முறையில் உபயோகிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஈ) ஊநுசுயு வேலைத்திட்டத்தின் பணிகள் தொடர்பாக முழுமையான பரிசோதனை ஒன்றினை மேற்கொள்ள குறித்துக் கொண்டேன்.

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

(அ) நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு அப்பணிகளை சரியான முறையில் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒப்பம்..∴.
பேராசிரியர் என், டி. குணவர்தன
செயலாளர்

# அத்தியாயம் 04 – செயலாற்றுகை குறிகாட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறியீடுகள் ( செயல்திட்ட அறிக்கையின் அடிப்படையில்)

| குறிப்பிட்ட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளில் உண்மையான வெளியீடுகளின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டம். | ✓ | | |
| அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சைபர் பாதுகாப்பு கொள்கை (22 ஆகஸ்ட் 2024) | ✓ | | |

அமைச்சானது இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள (SLUDI) திட்டத்தை மட்டுமே கொண்டது.

இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள (SLUDI) கருத்திட்டமானது தொழில்நுட்ப அமைச்சின் கட்டப்பாட்டில் உள்ளதோடு, 2022 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் முதலாவது இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டையை (SLUDI) வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. பத்தரமுல்லை ஆட்பதிவுத் திணைக்கள வளாகத்தில் தனியான கருத்திட்ட அலுவலகம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. மேலே விபரித்தவாறு, உயிரியல்சார் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்குவதன் 5லம் ஆள் அடையாளத்துடன் தொடர்புடைய பல முறைகேடுகள் மற்றும் இணக்கமின்மைகள் தீர்க்கப்படுவதுடன், அதுவே இலங்கையில் உத்தியோகபூர்வ பரந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் பொதுமக்கள் அடையாளத்திற்கான சட்டரீதியானதும் உறுதிப்படுத்தப்பட்டதுமான முறையாக இருக்கும்.

இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள (SLUDI) கருத்திட்ட அலுவலகமும் ICTA உம் இணைந்து தொழில்நுட்ப அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கவுள்ளன. அமைச்சின் செயலாளர் இக்கருத்திட்டத்தின் செயலாற்றுகையினை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வதுடன் திட்டமிட்டபடியே சுமுகமாக அமுல்படுத்துவதற்கான தீர்வுகளையும் மேற்கொள்ளவுள்ளார்.

- ளுடுருனுஐ இன் கருத்திட்ட அமுலாககலின் முன்னேற்றத்தை கண்காணித்த மீளாய்வ செய்வதற்கு இலங்கை அரசாங்கம். இந்திய அரசாங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கூட்டு கருத்திட்ட முகாமைத்துவக் குழு (JPMC) நியமனம் செய்யப்பட்டது.

- ஞடுருனுஜ கருத்திட்டத்தை அமுலாக்கவும் செயற்படுத்தவும் ஆதரவு மற்றும் பராமரிப்புகளை மேற்கொள்வதற்காக பிரதான அமைப்பு ஒரங்கிணைப்பாளரை (MSI) பெறுவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக்குழு (CAPC) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) என்பன நியமிக்கப்பட்டன.

- அடையாள அமைப்பிற்கான ஒரங்கிணைப்பாளர் (ISI)ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்மொழிவிற்கான கோரிக்கை (RFP) தயாரிக்கப்பட்டு வருகிறது

# அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (ஞனுபு) அடைவதற்கான செயலாற்றுகை

## 5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடவும்.

| இலக்கு ∴ நோக்கு | இலக்குகள் | குறிகாட்டிகள் | அடைவுகளின் முன்னேற்றம் இன்றுவரை | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50% - 74% | 75% - 100% |
